தினமணி

**பேச்சிப்பாறையில் வேளாண் அறிவியல் மையம் தொடர்ந்து செயல்படும்**

First Published : 13 Jun 2010 02:33:05 PM IST

குலசேகரம், ஜூன் 12: பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையம் இடமாற்றம் செய்யப்படாது என, திருவட்டார் சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர் ஆர். லீமாரோஸ் சனிக்கிழமை நம்பிக்கை தெரிவித்தார்.

கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறை தோட்டக் கலை ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் வேளாண் அறிவியல் மையம் இயங்கி வருகிறது.

தோட்டக் கலை பயிர்களுக்கான இந்த வேளாண் அறிவியல் மையத்தை நாகர்கோவில் அருகேயுள்ள திருப்பதிசாரத்திற்கு இடம் மாற்றம் செய்ய தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் முடிவு செய்தது.

இதையடுத்து, திருப்பதிசாரத்தில் ரூ. 1.39 கோடியில் நிர்வாக அலுவலகம், பயிற்சிக் கூடம், அலுவலர் குடியிருப்பு கட்ட ஒப்பந்தம் கோரப்பட்டது.

இதற்கு விவசாயிகள், அரசியல் கட்சியினர், பழங்குடி மக்கள் உள்பட பல்வேறு அமைப்பினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இதைதொடர்ந்து இப்பிரச்சனை குறித்து விவாதித்து முடிவெடுக்கும் வகையில் குமரி மாவட்ட ஆட்சியர் ராஜேந்திர ரத்னூ தலைமையில் நாகர்கோவிலில் வெள்ளிக்கிழமை கூட்டம் நடைபெற்றது.

இது குறித்து லீ0மாரோஸ் எம்.எல்.ஏ. கூறியதாவது:

பேச்சிப்பாறை வேளாண் அறிவியல் மையத்தை இடம் மாற்றம் செய்யக் கூடாது என்று நாங்கள் விடுத்த கோரிக்கையையடுத்து மாவட்ட ஆட்சியர் தலைமையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இதில் வேளாண்மைப் பல்கலைக் கழகம் சார்பில் அதன் பதிவாளர் சுப்பையன், விரிவாக்க கல்வி இயக்குநர் கலைச் செல்வன், போராட்டக் குழு சார்பில் அமைப்பாளராகிய நான் (லீமாரோஸ்), போராட்டக் குழு உறுப்பினர்களாகிய விளவங்கோடு சட்டப் பேரவை உறுப்பினர் ஜான்ஜோசப், மாவட்ட பாசனத்தார் சபைத் தலைவர் வின்ஸ் ஆன்டோ, வாழை விவசாயிகள் கூட்டமைப்புத் தலைவர் ரோஸ் ராபின், உழவர் பெருமன்றச் செயலர் ஹென்றி, அருவிக்கரை ஊராட்சித் தலைவர் லாரன்ஸ், தேமுதிக மாவட்டச் செயலர் ஜெகநாதன், சிஐடியூ மாவட்டச் செயலர் அண்ணாதுரை, ஆற்றூர் பேரூராட்சி முன்னாள் தலைவர் பிராங்கிளின், தமிழ்நாடு மலைவாழ்

மக்கள் சங்கச் செயலர் ரகு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகி ராமகிருஷ்ணன், ஜசூல் அமைப்பின் தலைவர் குணசீலன், தேமுதிக இளைஞர் அணிச் செயலர் டல்லஸ் மற்றும் மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகிகள் சகாய ஆன்டனி, ஸ்டாலின் தாஸ், ராதாகிருஷ்ணன், இஸ்மாயில் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதில் 2006 வன உரிமைச் சட்டத்தில் உள்ள தளர்வுப் படி வனப்பகுதிக்குள்பட்ட இடங்களில் கல்வி நிலையம், பயிற்சிக் கூடம் உள்ளிட்டவை அமைக்கலாம் என்ற விதி உள்ளதை குறிப்பிட்டும், மேலும், கன்னியாகுமரி மாவடடத்தில் பெரும்பகுதி தோட்டக் கலைப் பயிர்கள் சாகுபடியாகும் பகுதியில் தான் வேளாண்மை அறிவியல் நிலையம் அமைக்க வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து, பேச்சிப்பாறையில் வேளாண் அறிவியல் நிலையம் தொடர்ந்து இயங்க நடவடிக்கை எடுக்கும் வகையில் அரசுக்கு அறிக்கை அனுப்பப்படும்.

எனவே, இங்கு வேளாண் அறிவியல் நிலையம் தொடர்ந்து இயங்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்றார் லீமாரோஸ்.

**நிகழாண்டிலும் ஒரு போக நெல் சாகுபடி?**

First Published : 13 Jun 2010 01:59:13 PM IST

திருச்சி, ஜூன் 12: மேட்டூர் அணை

ஜூன் மாதம் முடிவடைவதற்குள் திறப்பதற்கான வாய்ப்புகள் குறைவாக இருப்பதால், திருச்சி மாவட்டத்தில் நிகழாண்டிலும் ஒரு போக நெல் சாகுபடி மட்டுமே மேற்கொள்ளும் சூழ்நிலை நிலவுகிறது.

ஒரு காலத்தில் மூன்று போகம் நெல் விளைச்சல் கண்ட இந்த மாவட்டத்தில் தற்போது இரு போக சாகுபடியே கேள்விக் குறியாகிவிட்டது.

கடந்த சில ஆண்டுகளாகப் பெரும்பாலான விவசாயிகள் ஒரு போக சாகுபடி மட்டுமே மேற்கொண்டு வருகின்றனர்.

குறுவை பாசனத்துக்காக மேட்டூர் அணை ஆண்டுதோறும் ஜூன் 12-ம் தேதி திறக்கப்பட வேண்டும். ஆனால், ஜூன் மாதத்தில் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லை என்பதைக் காரணம் காட்டி, திறந்து விடப்படுவதில்லை. இதனால், காவிரி டெல்டா மாவட்டங்களைப் போல, திருச்சி மாவட்டத்திலும் குறுவை நெல் சாகுபடி இயல்பான பரப்பளவை எட்டுவதில்லை.

திருச்சி மாவட்டத்தில் குறுவை நெல் சாகுபடியின் இயல்பான பரப்பளவு 9,000 ஹெக்டேர். குறிப்பாக, காவிரி பாசனப் பகுதிகளான திருச்சி (ஒரு பகுதி), ஸ்ரீரங்கம், லால்குடி (ஒரு பகுதி), மண்ணச்சநல்லூர், முசிறி, தொட்டியம் ஆகிய பகுதிகளில் இந்தச் சாகுபடி மேற்கொள்ளப்படும்.

ஆனால், 2002 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 4 ஆண்டுகள் மேட்டூர் அணை உரிய காலத்தில் திறக்கப்படாததால், மாவட்டத்தில் பெரும்பாலான விவசாயிகள் குறுவை சாகுபடியைக் கைவிட்டனர். இதனால், குறுவை சாகுபடி இலக்கும் எட்டப்படவில்லை.

இந்நிலையில், 2006 ஆம் ஆண்டில் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதால், மாவட்டத்தில் குறுவை சாகுபடி இயல்பான அளவையும் விஞ்சி 9,500 ஹெக்டேரில் மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர், 2007 ஆம் ஆண்டில் காவிரியில் உரிய காலத்தில் தண்ணீர் திறந்து விடப்படவில்லை. அது மட்டுமல்லாமல், போதிய அளவு தென் மேற்குப் பருவ மழையும் பெய்யாததால், 2007 ஆம் ஆண்டில் குறுவை சாகுபடியின் இயல்பான பரப்பளவு 6,000 ஹெக்டேராக குறைக்கப்பட்டது.

என்றாலும், 2007 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விட குறைவாக 4,675 ஹெக்டேரில் மட்டுமே பயிரிடப்பட்டது.

2008 ஆம் ஆண்டில் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறந்து விடப்பட்டாலும், தொடர்ந்து நீர் வரத்து இல்லாததால், 6,337 ஹெக்டேரில்தான் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

2009 ஆம் ஆண்டில் மேட்டூர் அணை திறப்பு தள்ளிப் போனதால், 4,224 ஹெக்டேரில் குறுவை சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. எனவே, பெரும்பாலான விவசாயிகள் நேரடியாக சம்பா நெல் சாகுபடி மேற்கொண்டனர்.

இந்த நிலைமை நிகழாண்டிலும் நிலவுகிறது. மேட்டூர் அணை ஜூன் மாதம் முடிய திறக்க வாய்ப்பு இருப்பதாகத் தெரியவில்லை. இதேபோல, தென் மேற்குப் பருவ மழையும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. எனவே, நிகழாண்டிலும் குறுவை சாகுபடியைத் தொடங்க பெரும்பாலான விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

மே மாதத்தில் பெய்த கோடை மழை மூலம் மாவட்டத்தில் ஏறத்தாழ 40,000 ஹெக்டேரில் கோடை உழவு மேற்கொள்ளப்பட்டது. ஆனால், மாவட்டத்தில் இதுவரை 312 ஹெக்டேரில் மட்டுமே குறுவைக்கான நடவு செய்யப்பட்டுள்ளது. ஏறத்தாழ 100 ஹெக்டேரில்தான் நாற்றும் விடப்பட்டுள்ளது.

மோட்டார் பம்ப்செட் மூலம் குறுவை சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளும் மின் வெட்டு பிரச்னை காரணமாக தயங்குகின்றனர்.

இதனால், நிகழாண்டில் 3,000 முதல் 4,000 ஹெக்டேருக்குள் மட்டுமே குறுவை சாகுபடி செய்ய வாய்ப்பு இருப்பதாக வேளாண் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதுகுறித்து அய்யன் வாய்க்கால் பாசனதாரர் சங்க ஒருங்கிணைப்பாளர் என். வீரசேகரன் கூறியது:

"திருச்சி மாவட்டத்தில் குறுவை, சம்பா பருவங்களில் நெல் சாகுபடி செய்யப்படுவதோடு மட்டுமல்லாமல், கோடை காலத்தில் உளுந்து, எள் போன்ற பயிறு வகை சாகுபடியும் மேற்கொள்ளப்படுவது வழக்கம். ஆனால், கடந்த சில ஆண்டுகளாக காவிரியில் போதிய

அளவுக்குத் தண்ணீர் வராததாலும், பருவ மழை எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததாலும், சம்பா நெல் சாகுபடி மட்டுமே முழுமையாக மேற்கொள்ளப்படும் நிலை உள்ளது.

கோடை காலத்தில் உளுந்து அல்லது எள் என ஏதாவது ஒன்றுதான் பயிரிட முடிகிறது. இந்நிலையில், நிகழாண்டிலும் ஜூன் மாதத்தில் தண்ணீர் வர வாய்ப்பில்லாததாலும், மின் வெட்டு பிரச்னை காரணமாகவும் குறுவை சாகுபடி மேற்கொள்ள தயக்கம் நிலவுகிறது' என்றார் வீரசேகரன்.

**ஜூன் 18-ல் கரும்பு விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

First Published : 13 Jun 2010 01:41:57 PM IST

தஞ்சாவூர், ஜூன் 12: தஞ்சாவூர் மாவட்ட கரும்பு சாகுபடி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் ஜூன் 18-ம் தேதி மாலை 4 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் எம்.எஸ். சண்முகம் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கரும்பு பயிர் சாகுபடி பதிவு, கரும்பு அறுவடை செய்வதற்கு ஆள்கள் பற்றாக்குறை, பணம் பட்டுவாடா போன்ற விவரங்கள் இக் கூட்டத்தில் விவாதிக்கப்படும். எனவே, இக் கூட்டத்தில் கரும்பு சாகுபடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன் அடையலாம் என்றார்.

**துவரை சாகுபடி தொழில்நுட்ப விளக்க கூட்டம்**

First Published : 13 Jun 2010 11:46:30 AM IST

நாமக்கல், ஜூன் 12: துவரை சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு தொழில்நுட்ப விளக்கம் அளிக்கும் வகையில் திங்கள் மற்றும் செவ்வாயக்கிழமை கூட்டம் நடைபெறுகிறது.

÷நாமக்கல் வட்டாரத்தில், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத் தின் கீழ் துவரை சாகுபடி செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதற்கான தொழில் நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளித்திடும் வகையில் கிராம முனைப்பு கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

÷ திங்கள்கிழமை மாலை 4 மணிக்கு திண்டமங்கலம் காளியண்ணன் தோட்டத்திலும், செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு முதலைப்பட்டி அம்மையப்பன் தோட்டத்திலும் கூட்டம் நடைபெறும்.

இக்கூட்டங்களில் துவரை சாகுபடி செய்யும் விவசாயிகள் பங்கேற்று பயன்பெறலாம்.

**வாத்து வளர்ப்பு குறித்து ஒருநாள் இலவச பயிற்சி வகுப்பு**

First Published : 13 Jun 2010 11:45:29 AM IST

நாமக்கல், ஜூன் 12: நாமக்கல் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வாத்து வளர்ப்பு ஓர் அறிமுகம் எனும் தலைப்பில் ஒருநாள் இலவச பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

÷நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் இயங்கும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் மூலம் விவசாயிகளுக்காவும், தொழில் முனைவோரை ஊக்கப்படு0த்தவும் பல்வேறு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

÷இதன் ஒரு பகுதியாக வாத்து வளர்ப்பு ஓர் அறிமுகம் எனும் தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு வரும் 17-ம் தேதி நடத்தப்படுகிறது.

÷இந்த பயிற்சியில், உயர்ரக வாத்து இனங்கள், வளர்ப்புக்குரிய இடங்களை தேர்வு செய்தல், வாத்து குடில் அமைத்தல், குஞ்சுகளை இருப்பு செய்தல், தீவன மேலாண்மை, நீர் மேலாண்மை, நோய் மேலாண்மை மற்றும் பொருளாதாரம், சந்தைப்படுத்துதல், விற்பனை வாய்ப்புகள், தொழில்நுட்ப முறைகள் குறித்து விரிவாக கற்றுத்தரப்படும். விவசாயிகள், ஊரக மகளிர், தொழில் முனைவோர், இளைஞர்கள் என அனைவரும் பங்கேற்கலாம்.

÷ பயிற்சியில் பங்கேற்க விரும்பும் நபர்கள் தங்களது பெயரை வரும் 16-ம் தேதிக்குள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டிய முகவரி:

வேளாண்மை அறிவியல் நிலையம், கால்நடை மருத்துவக் கல்லூரி வளாகம், நாமக்கல்,

தொலைபேசி 04286- 266345, 266244.

**திருக்கோவிலூரில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

First Published : 13 Jun 2010 11:06:50 AM IST

திருக்கோவிலூர், ஜூன் 12: திருக்கோவிலூர் பகுதியில் சில தினங்களாக பெய்து வரும் மழையால் விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திருக்கோவிலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதியில் கடந்த 3 நாள்களாக இரவு மற்றும் பகல் நேரங்களில் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. இதனால் வாழை, நெல், கரும்பு, மரவள்ளிக் கிழங்கு, கம்பு போன்றவைகளை பயிரிடப்பட்ட விவசாயிகளுக்கு இந்த மழை மிகவும் பயனுள்ளதாக அமைந்தது. மேலும் அறுவடை செய்யப்பட்ட எள். இவற்றை சுமார் 1 வாரகாலம் போர்போட்டு பதப்படுத்தி உலர்த்திய பிறகுதான் இதைப் பிரித்து எடுப்பது வழக்கம். இந்நிலையில் இப்பகுதியில் பெரும்பாலான கிராமங்களில் பதப்படுத்துவதற்காக போடப்பட்ட எள் போர்கள் இந்த மழையால் மட்கிப் போகும் நிலை ஏற்பட வாய்ப்புள்ளதாகவும், இதனால் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக எள் பயிரிட்ட விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்தோடு இந்த மழையால் இப்பகுதியில் உள்ள நீர்நிலை ஆதார அமைப்புகளில் ஓரளவு தண்ணீர் தேங்கி நிற்பதோடு, எந்நேரமும் குளிர்ந்தக் காற்று வீசுவதால் கோடை வெயில் தாக்கத்திலிருந்து பொதுமக்கள் மீண்டுள்ளனர்.

**விவசாயிகளுக்கு நேரடி செயல் விளக்கம்**

First Published : 13 Jun 2010 11:32:05 AM IST

ஈரோடு, ஜூன் 12: நெல் நடவு இயந்திரம் குறித்து விவசாயிகளுக்கு வயலில் நேரடி செயல்விளக்க பயற்சி முகாம் கூட்டுறவுத் துறையால் நடத்தப்பட்டது.

விவசாயத்தில் ஆள் பற்றாக்குறையைப் போக்கும் வகையில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் விவசாயத் தொழில்நுட்பக் கருவிகளை குறைந்த வாடகையில் விட அரசு உத்தரவிட்டுள்ளது. நெல் சாகுபடியில் ஆள்களை வைத்து நடவு செய்வதில் ஏற்படும் காலதாமதம், ஆள்பற்றாக்குறை பிரச்னைகளால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. எனவே நெல் நடவு இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஈரோடு மாவட்டம், அவல்பூந்துறை அருகேயுள்ள கணபதிபாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க உறுப்பினர் சி.ரமேஷ் என்பவரது எலந்தக்காட்டு தோட்ட வயலில், நெல் நடவு இயந்திர நேரடி செயல்விளக்க முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது (படம்).

இதில் நெல் நடவு இயந்திர நிறுவனத்தின் பயிற்றுநர்கள் அன்பு, ரவி ஆகியோர் பங்கேற்று, விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தனர். நெல் நடவு முறைகள், இயந்திரத்தின் பயன்கள், நாற்று நடுதல் குறித்து அவர்கள் விளக்கினர்.

இதில் ஈரோடு சரக துணைப்பதிவாளர் ஜி.காந்திநாதன் பேசுகையில், வரும் ஆகஸ்ட் மாதம் கீழ்பவானி நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் விடப்படும்.
அப்போது நெல் நடவு செய்ய இந்த இயந்திரம் பெரிதும் உதவியாக இருக்கும். தற்போது கூட்டுறவு சங்கத்தில் பதிவு செய்து கொண்டால், முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு நெல் நடவு இயந்திரம் வாடகைக்கு அளிக்கப்படும் என்றார்.

மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ப.லோகநாதன், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்ட பொதுமேலாளர் கி.ரேணுகா, கோபி சரக துணைப்பதிவாளர் மா.சந்தானம் மற்றும் கூட்டுறவுத்துறை அலுவலர்கள் இம்முகாமில் கலந்து கொண்டனர்.

**முள்ளங்கினாவிளையில் 145 மி.மீ. மழை**

First Published : 13 Jun 2010 02:34:03 PM IST

நாகர்கோவில், ஜூன் 12: முள்ளங்கினாவிளையில் சனிக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக 145 மி.மீ. மழை கொட்டியது.

பிற இடங்களிலும், அணைப் பகுதிகளிலும் பெய்த மழையளவு (மி. மீட்டரில்):

பேச்சிப்பாறை- 31, பெருஞ்சாணி- 25.8, சிற்றார் 1- 55, சிற்றார் 2- 48, முக்கடல்- 35, சுருளோடு- 35.2, பூதப்பாண்டி- 27.2, கன்னிமார்- 12.3, நாகர்கோவில்- 25.2, மயிலாடி- 20, புத்தன்அணை- 25.6, கொட்டாரம்- 36.2, ஆரல்வாய்மொழி- 10.4.

பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 568 கன அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 192 கன அடியும், சிற்றார் 1 அணைக்கு 52 கன அடியும், சிற்றார் 2 அணைக்கு 93 கன அடியும் தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

மாணவி கொலையை கண்டித்து தர்னா

மார்த்தாண்டம், ஜூன் 12: வெள்ளாங்கோடு ஊராட்சி அம்பக்கடையில் பள்ளி மாணவியை பாலியல் பலாத்காரம் செய்து கொலை செய்த ரூஸ்வெல்ட் மீது கடும் நடவடிக்கை எடுக்கக் கோரி அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் தர்னா நடைபெற்றது.

அருமனை சந்திப்பில் நடைபெற்ற இந்த தர்னாவிற்கு சங்கத்தின் அருமனை வட்டாரக் குழு உறுப்பினர் பேபி தலைமை வகித்தார்.

சங்கத்தின் தமிழ் மாநிலக் குழு உறுப்பினர் கனகாபாய் போராட்டத்தை துவக்கிவைத்தார்.

சங்கத்தின் மாவட்டத் தலைவர் லீமாறோஸ் எம்.எல்.ஏ, மாவட்டச் செயலர் உஷாபாஷி, சங்கத்தின் மார்த்தாண்டம் வட்டாரக் குழுச் செயலர் ஏ.எம்.வி. டெல்பின் ஆகியோர் பேசினர். மாநில துணைத் தலைவர் டி.ஆர். மேரி போராட்டத்தை முடித்துவைத்து பேசினார்.

இதில் அருமனை வட்டாரக் குழுச் செயலர் சாரதாபாய், முழுக்கோடு ஊராட்சித் தலைவர் மரிய செல்வி விலாசினி, பாகோடு பேரூராட்சி உறுப்பினர் கேதரின் எஸ்தர் டாணி, திருவட்டார் வட்டாரக் குழுச் செயலாளர் சுசீலா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**நிரந்தர வாழ்வாதாரமின்றி தவிக்கும் ஆடு வளர்ப்பு தொழிலாளர்கள்**

First Published : 14 Jun 2010 01:55:03 AM IST



திருத்துறைப்பூண்டி : ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஆடு வளர்க்கும் தொழிலாளர்கள் 6 மாதங்கள் சொந்த மாவட்டத்திலும், அடுத்த 6 மாதங்கள் காவிரி டெல்டா மாவட்டங்களிலும் தங்கி ஆடு மேய்க்கும் தொழில் செய்து வருகின்றனர். தங்களின் நிரந்தரமான வாழ்வாதாரத்துக்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த திருப்புல்லாணி, மேலமடை, கொம்பூதி, காஞ்சரங்குடி, உச்சிப்புளி, திருவாடானை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த, ஆயிரக்கணக்கான குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து ஆடு வளர்க்கும் தொழிலைச் செய்து வருகின்றனர்.

மழை குறைவாகப் பெய்வதாலும், மாவட்டத்தில் சாகுபடிக்கு தண்ணீர் ஆதாரம் எதுவும் இல்லாத நிலையிலும், மானாவாரி நிலப்பரப்பில் ஆடுகளைப் பராமரிக்க வழியில்லாததாலும், பிப்ரவரி மாத இறுதியில் ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து ஆடுகளை கால்நடையாக ஓட்டிக்கொண்டு வருகின்றனர். அவர்கள், வழிநெடுகிலும் சாலையோரம் ஆடுகளோடு தங்கி, பல நடைமுறை சங்கடங்களுக்கிடையே தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களுக்கு வந்து சேர்வர். வழியில் சாலை விபத்தில் ஆடுகள் பலியாகும் சம்பவங்களும் நேரிடும்.

காவிரி டெல்டா மாவட்ட வயல்வெளிகளில் பனை மட்டையினால் அமைக்கப்பட்ட தாற்காலிக குடாப்களை அமைத்து, குடும்பத்தினருடன் தொழிலாளர்கள் தங்குவர். ஒரு குடும்பத்துக்கு சுமார் 400 முதல் 500 ஆடுகள் வரை இருக்கும். இதுபோலத் தங்கும்போது ஆடுகளை நரி, காட்டுப்பூனை போன்றவை தூக்கிச் செல்வதும், பலவகை நோய்களினால் ஆடுகள் இறப்பதும் தொடர்ந்து வாடிக்கையாகிவிட்டது.

இதுமட்டுமல்லாது, ஆடுகளுக்கு ஏற்படும் பில்முறிவு, நீலநாக்கு நோய் உள்ளிட்ட நோய்களைத் தடுப்பதற்கான தடுப்பூசி போடுவதற்கு அரசு கால்நடை மருத்துவமனைகளில் உரிய ஏற்பாடுகள் ஏதும் இல்லாத காரணத்தால், பல நேரங்களில் பெருமளவிலான ஆடுகள் இறப்பதும் உண்டு. இறக்கும் ஆடுகளுக்கு காப்பீடு செய்திருந்தாலும்கூட பல சமயங்களில் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனைகளில் பரிசோதனை செய்து, சான்றிதழ் பெறுவதிலும் பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுவதாக அந்தத் தொழிலாளர்கள் கூறுகின்றனர்.

ஆடு வளர்ப்போர் வாழ்க்கை நிலை குறித்து அரசு ஆய்வு நடத்தி, அவர்கள் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கும் வகையில், குழுக் காப்பீட்டுத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். கால்நடைத் துறை, வனத் துறை, வருவாய்த் துறையினர் இணைந்த ஒருங்கிணைப்புக் குழு அமைத்து அவர்களின் பல்வேறு பிரச்னைகளையும் கண்டறிந்து, அதற்குரிய தீர்வு காண வேண்டும்.

மேலும், ஆடு வளர்ப்போருக்கென நல வாரியம் அமைத்து, நிரந்தர வாழ்வாதாரத்தை அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதே ஆடு வளர்ப்புத் தொழிலாளர்களின் எதிர்பார்ப்பு.

தினமலர்

**விவசாய நிலம் பட்டா மாற்றுவதில்.: தாமதம்!: தேவையின்றி விவசாயிகள் அலைகழிப்பு**

விழுப்புரம்: விழுப்புரம் மாவட்டத் தில் விவசாய நிலங்கள் மற்றும் வீட்டு மனைகள் பட்டா மாற் றம் மற்றும் சப்-டிவிஷன் செய்ய ஆண்டு கணக்கில் விவசாயிகள் அலைகழிக்கப்படுகின்றனர். தொழிற்சாலைகள் குறைந்த விழுப்புரம் மாவட்டத்தின் பிரதான தொழிலாக விளங்குவது விவசாயம். இம்மாவட் டத்தை சேர்ந்த 90 சதவீதத் திற்கு மேற் பட்ட மக் கள் விவசாயத்தை முதன்மை தொழிலாக செய்து வருகின்றனர். இந்நிலையில் விவசாய நிலங்கள் ஒருவரிடமிருந்து மற்ற விவசாயிகள் வாங்குவதும் இம் மாவட்டத்தில் அதிகரித்து வருகிறது.இவ்வாறு கிரையம் பெரும் விவசாய நிலம் மற்றும் வீட்டு மனைகளை உரிமையாளர்களுக்கு பட்டா மாற்றுவதற்கான விண்ணப்பங்களும் கிரையம் செய்யும் போதே பதிவு அலுவலகத்தில் பெறப்படுகிறது. பெறப்படும் தகவல்கள் தொடர்புடைய தாலுகா அலுவலகங்களுக்கும் உடனுக்குடன் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்வாறு அனுப்படும் மனுக் கள் மீது துரித நடவடிக்கை எடுத்து உடனடியாக பட்டா மாற்றம் செய்ய வேண்டிய பொறுப்பு தாலுகா அளவில் இயங்கி வரும் நில அளவை துறையின் பொறுப்பாகும். இருப்பினும் இந்த பணியினை சிறிது கூட தாலுகா அளவில் இயங்கி வரும் சர்வே துறையினர் செய்வது இல்லை.நிலம் மற்றும் வீட்டுமனை கிரையம் பெற்ற உரிமையா ளர்கள் தங்கள் பெயரில் பட்டா மாற்றம் செய்யக் கோரி தாலுகா அலுவலகங்களில் செயல் பட்டு வரும்

நில அளவை துறையினரிடம் விண்ணப் பம் செய்கின்றனர். மேலும் சப்-டிவிஷன் செய்பவர்கள் அதற்கான வங்கி கட்டணமும் செலுத்துகின்றனர்.

அம்மனுக்களின் மீது ஏனோ தானோ என்று நில அளவை துறையினர் நடவடிக்கை எடுத்ததாக கூறி, மனுவின் மேல் நடவடிக் கையை முடக்கி வைத்து விடுகின்றனர். மேலும் 3 மாதத்திற்கு ஒருமுறை புதிதாக மனு செய்யுமாறும், அதற்கான கட்டணம் செலுத்துமாறும் விவசாயிகளை நிர்ப்பந்தப்படுத்துகின்றனர்.ஒரு சிலர் நிலம் மற்றும் வீட்டுமனைகளை சப்-டிவிஷன் செய்து பட்டா மாற்றம் செய்து தரக் கோரி மனுக்கள் செய்து 2 முதல் 4 ஆண்டுகள் வரை காத்திருந்தும் பலனின்றி பரிதவிக்கின்றனர்.சர்வே துறையினரிடம் இது பற்றி விளக்கம் கேட்கும் போது போதுமான ஆட்கள் இல்லை என்று கூறி கைவிரித்து விடுகின்றினர். விழுப்புரம் மாவட் டத்தில் குறிப் பாக திண்டிவனம் மற்றும் விழுப்புரம் தாலுகா பகுதிகளில் விவசாயிகள் பட்டா மாற்றம் செய்ய முடியாமல் அதிகளவில் பாதிக் கப்பட்டுள்ளனர்.

நாட்டின் பிரதான, முதுகெலும்பாக விளங்கும் விவசாயகளுக்கு நிலம் மற்றும் வீட்டுமனை உரிமைகளை கூட சரியாக பூர்த்தி செய்து கொடுக்காமல் நில அளைவை துறையினர் அலைகழித்து வருகின்றனர்.அதற்கு மாவட்ட நிர்வாகம் மவுனமாக இருந்து எந்த வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பது விவசாயிகளிடையே பெரும் ஏமாற் றத்தை ஏற்படுத்தி உள்ளது.தற்போது நடக்கும் ஜமாபந்தி நிகழ்ச்சியிலாவது பெறப்படும் மனுக் கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காண வேண்டும்.

**முல்லை அரும்பு சாகுபடி செய்தால் அதிக லாபம்: விவசாயிகள் மகிழ்ச்சி**

விழுப்புரம்: முல்லை அரும்பு சாகுபடியில் அதிக லாபம் கிடைப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர். விழுப்புரம் அடுத்த எரிச்சனாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி தண்டபாணி. இவர் 4 ஏக் கர் நிலத்தில் கரும்பு, முல்லை அரும்பு, எள் ஆகி யவற்றை சாகுபடி செய் துள்ளார். தற்போது திருமணம், கோவில் திருவிழாக்கள் அதிகரித்துள்ள நிலையில் நகர பகுதிகளில் முல்லை அரும்பு பூ அதிக விலைக்கு விற் பனை செய் யப்படுகிறது.முல்லை அரும்பு சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயி தண்டபாணி கூறியதாவது:எரிச்சனம்பாளையத் தில் உள்ள எனது கால் காணி நிலத்தில்(36 செண் டில்) முல்லை அரும்பு சாகுபடி செய்துள்ளேன். இந்த சாகுபடிக்கு மருந்து தெளிப்பதை தவிர வேறு செலவு கிடையாது. ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் சாகுபடி செலவாகிறது. நிலத்தில் ஒரு நாளைக்கு 4 கிலோ முல்லை அரும்பு பூ பூக்கிறது. பண்டிகை

காலங் களில் இந்த பூ கிலோ 150 ரூபாய்க்கும், சாதாரண நாட்களில் 100க்கும் விற்பனையாகிறது.எனது நிலத்தில் பூக்கும் முல்லை அரும்பை அருகே உள்ள பகுதியை சேர்ந்த வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் விற் பனைக்கு வாங்கி செல் கின் றனர். வெளி நகரங்களுக்கு செல்வதில்லை. முல்லை அரும்பு சாகுபடியில் செலவு போக 7 ஆயிரம் ரூபாய் ஏக்கருக்கு லாபம் கிடைக்கிறது என விவசாயி தண்டபாணி தெரிவித்துள்ளார்.

**கூட்டேரிப்பட்டில் மான்ய விலையில்உளுந்து, மணிலா விதைகள் விற்பனை**

விழுப்புரம்: கூட்டேரிப்பட்டு வேளாண் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உளுந்து மற் றும் மணிலா விதை விற் பனை செய்யப்படுகிறது.
மயிலம் வேளாண்மை உதவி இயக்குனர் வேலாயுதம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:விழுப்புரம் மாவட்டம், மயிலம் வட்டாரத்தில் தற்போது கோடை மழை பரவலாக பெய்து வருகிறது. இதனை பயன்படுத்தி விவசாயிகள் கோடை உழவு செய்வதால் நிலத்திலுள்ள களைகள் மற்றும் கோரைக் கிழங்குகள் அழிக்கப்பட்டு, மண்ணிலுள்ள தீமை செய்யும் பூச் சிகளின் கூட்டுப்புழுக்கள் மண்ணின் மேற்பரப்பிற்கு கொண்டு வரப்பட்டு அழிக்கப்படுகின்றன.மேலும் கோடை உழவு செய்வதால் மழைநீர் வீணாகாமல் நிலத்திலேயே உறிஞ்சப்பட்டு மண்ணின் ஈரப்பதம் பாதுகாக்கப்படுகிறது. இதனால் மானாவாரி பருவத்தில் சாகுபடி செய் யப்படும் பயிர்களுக்கு மண் ணின் ஈரப்பதம் கூடுதலான நாட்களுக்கு கிடைக் கும் வாய்ப்பு ஏற்படும். எனவே ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு முறைகளில் முக்கியமானதாக பரிந்துரை செய்யப்படும் கோடை உழவு செய்து விவசாயிகள் பயன்பெறலாம்.மேலும் தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் மயிலம் வட்டாரத்தில் மானாவாரி உளுந்து சாகுபடியை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி விவசாயிகளுக்கு தரமான சான்று பெற்ற வம்பன் 4, வம்பன் 3 ரக உளுந்து விதைகள் கிலோவுக்கு 12 ரூபாய் வீதம் மானிய விலையில் வழங்கப்படுகிறது. அதேபோல் ஒருங்கிணைந்த எண்ணெய் வித் துக்கள் அபிவிருத்தி திட் டத்தின் கீழ் மானாவாரி மணிலா பயிர் செய்ய தரமான சான்று பெற்ற வி.ஆர்.ஐ. 2 ரக மணிலா விதைகள் 50 சதவீதம் மானிய விலையில் விற் பனை செய்யப்படுகின்றன.எனவே விதை உளுந்து மற்றும் மணிலா தேவைப் படும் விவசாயிகள் கூட்டேரிப்பட்டு மற் றும் ரெட்டணை வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**பருத்தி சாகுபடி பயிற்சி**

கடலூர்: கடலூர் அடுத்த கீழ்குமாரமங்கலம் கிராமத்தில் பருத்தி சாகுபடி பயிற்சி நடந்தது.ஊராட்சி தலைவி கிருஷ்ணவேணி தலைமை தாங்கினார். கடலூர் வட்டார வேளாண் உதவி இயக்குனர் இளவரசன் முன் னிலை வகித்தார்.வேளாண் அலுவலர் சின் னக்கண்ணு வரவேற் றார். மாவட்டவேளாண் துணை இயக்குனர் (மத் திய திட்டம்) பாபு, மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் விஜயலட்சுமி, வேளாண் அலுவலர் ராஜலட்சுமி, விவசாயிகள் பங்கேற்றனர். ஜெயமணி நன்றி கூறினார்.

**நீரில் கரையும் கரும்பு உரங்கள்100 சதவீத மானியத்தில் வழங்கல்**

திட்டக்குடி; நீரில் கரையும் ரசாயன உரங்கள் நூறு சதவீத மானிய விலையில் வழங் கும் விழா திட்டக்குடியில் நடந்தது.விழாவிற்கு மங்களூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பன் னீர்செல்வம் தலைமை தாங்கினார். ஆரூரான் சர்க்கரை ஆலை நிர்வாக முதுநிலை மேலாளர் (கரும்பு பிரிவு) பாலசுப்ரமணியன் முன்னிலை வகித்தார். மங்களூர் துணை வட்டார வேளாண்மை அலுவலர் டென்சிங் வரவேற்றார். இதில் கரும்பு அலுவலர்கள், ஆய்வாளர்கள் பங்கேற்றனர்.விழாவில் 2009-10ம் ஆண்டு தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயன்பெறும் சிறுபாக்கம் தாமரை கரும்பு துல்லிய பண்ணை சங்கம் மற்றும் ம.புதூர் வள்ளலார் கரும்பு துல் லிய பண்ணை சங்க விவசாயிகள் 40 பேருக்கு 100 சதவீத மானிய விலையில் கரும்பு பயிருக்கு நீரில் கரையும் ரசாயன உரங்கள் வழங்கப்பட்டது.

**சேத்தியாத்தோப்பில் மரக்கன்றுகள் நடும் விழா**

சேத்தியாத்தோப்பு: சேத்தியாத்தோப்பு ஊர்க்காவல் படை சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா நடந்தது.படை தளபதி தில்லைசேகரன் தலைமை தாங்கினார். பூதங்குடி ஊராட்சி தலைவர் ஞானமணி முன்னிலை வகித்தார். ஊர்க்காவல் படைவீரர் கனகசபை வரவேற்றார். சேத்தியாத்தோப்பு டி.எஸ்.பி., ராமச்சந்திரன் மரம் நடும் விழாவை துவக்கி வைத்து விளையாட்டு மைதானத்தில் மரக்கன்று நட்டார். நிகழ்ச்சியில் ஊர்க்காவல் படையினர் கிராம பிரமுகர்கள் கலந்து கொண்டனர். ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

**மண் பரிசோதனை நிலையம் திறப்பு விழா**

கடலூர்: கடலூர் அடுத்த வெள்ளக்கரை கிராமத்தில் தேசிய வேளாண் திட்டத்தின் கீழ் "அக்ரி கிளினிக்' மற்றும் மினி மண் பரிசோதனை நிலையம் திறப்பு விழா நடந்தது.
ஒன்றியத் தலைவர் விஜயராகவன் தலைமை தாங்கினார். கவுன்சிலர் ராஜலிங்கம் முன்னிலை வகித்தார். மாவட்ட வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் துவக்கி வைத்து, மண் பரிசோதனைக்கான நவீன சாதனங்களை பார்வையிட்டார். மாவட்ட வேளாண் துணை இயக்குனர் பாபு, கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) மணி, உதவி இயக்குனர் சீனிவாசன், இந்தியன் வங்கி முதுநிலை மேலாளர் பாண்டியன், வேளாண் அலுவலர் சின்னக்கண்ணு, பூவராகன், பூங்கோதை, ஜெயக்குமார், தோட்டக்கலை அலுவலர் முனுசாமி, கரும்பு ஆலை தனி அலுவலர் சுரேஷ், தொழில் முனைவர் பாலு உட்பட பலர் பங்கேற்றனர்.ஏற்பாடுகளை வேளாண் அலுவலர் தெய்வசிகாமணி, பரமசிவம் செய்திருந்தனர்.

**பயறு மகசூல் அதிகரிக்க டி.ஏ.பி., கரைசல் தெளிக்க அறிவுறுத்தல்**

நாமக்கல்: "பயறுவகை பயிர்களில் மகசூலை அதிகரிக்க டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டும்' என, புதுச்சத்திரம் வேளாண் உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட அறிக்கை: புதுச்சத்திரம் வட்டாரத்தில் தற்போது சாகுபடியில் உள்ள பயறுவகை பயிர்களில் மகசூலை அதிகரிக்க டி.ஏ.பி., கரைசல் தெளிப்பது அவசியம். விதைத்த 25 மற்றும் 40வது நாளில் 2 சதவீத டி.ஏ.பி., கரைசல் தெளிக்க வேண்டும். ஒரு முறை தெளிப்பதற்கு ஒரு ஏக்கருக்கு 5 கிலோ டி.ஏ.பி., உரத்தை 10 லிட்டர் நீரில் கரைத்து ஒரு இரவு முழுவதும் ஊற வைக்க வேண்டும்.காலையில் தெளிந்த நீரை வடிகட்டி 250 லிட்டர் தண்ணீரில் கலந்து கைத்தெளிப்பான் மூலம் காலை அல்லது மாலை வேளையில் மண்ணில் ஈரப்பதம் இருக்கும்போது தெளிப்பதால் பூ அதிகம் உற்பத்தியாகி, திரட்சியான காய்கள் பிடித்து மகசூல் அதிகரிக்கும்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பசுமை தொழில்நுட்ப முன்னோடி விருது டி.என்.பி.எல்., நிறுவனத்துக்கு வழங்கல்**

வேலாயுதம்பாளையம்: தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்துக்கு (டி.என்.பி.எல்.,) 2010-11ம் ஆண்டிற்கான பசுமைத் தொழில்நுட்பத்துக்கான முன்னோடி விருது வழங்கப்பட்டது.

பைனான்சியல் எக்ஸ்பிரஸ், ஒருங்கிணைந்த தட்வெப்ப நிலை மாற்றத்துக்காக செயல்படும் எமர்ஜென்ட் வென்ச்சர்ஸ் இந்தியா, ஹைதராபாத் இந்தியன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் ஆகிய

நிறுவனங்கள் இணைந்து, காகித கூழ் மற்றும் காகித உற்பத்தியில் பயன்படுத்தும் சிறந்த நிறுவனமாக, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தை நிறுவனத்தை தேர்தெடுத்துள்ளது. உலக வெப்பமயமாதலை தடுப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்கண்ட நிறுவனங்கள் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டது. டி.என். பி.எல்., நிறுவனம் புதுப்பிக்கக்கூடிய கரும்பு கையை உபயோகப்படுத்தி காகித தயாரிப்பு செய்வதோடு மட்டுமின்றி, இரண்டு தூய்மை மேம்பாட்டு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

முதலாவதாக கரும்பு கை கழிவுநீரிலிருந்து உயிர் வாயுவை உற்பத்தி செய்து சுண்ணாம்பு களவாயில் உலை எண்ணெய்க்கு பதிலாக பயன்படுத்துவது. இரண்டாவதாக காற்றலை திட்டத்தை செயப்படுத்துவது.

இந்த இரண்டு திட்டங்கள் மூலம் இதுவரை 2.30 கோடி டன் கரியமில வாயு வெளியேறுவது தடுக்கப்பட்டு, அதன் மூ லம் 17.4 கோடி ரூபாய் வருமா யை டி.என்.பி.எல்., நிறுவனம் பெற்றுள்ளது. இதுபோல மூ ன்று புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்காக தகுந்த ஆயத்த ஏற்பாடுகளை செய்து வருகிறது. இத்திட்டங்களின் நோக்கம் எரிதி மேம்பாடு, புதுப்பிக்கத்தக்க எரிதி உற்பத்தி (காற்றலை), மீத்தேன் வாயு வெளியேற்றத்தை தடுத்தல் மற்றும் எரிபொருள் சிக்கனம் ஆகியவையாகும்.

மேற்குறிப்பிட்ட திட்டங்களை தூய்மை மேம்பாட்டு திட்டங்களாக நடப்பாண்டில் பதிவு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. டி.என்.பி.எல்., நிறுவனம் 2012-13ம் ஆண்டுக்குள் ஒரு லட்சம் ஏக்கரில் கூழ் மரங்களை நடவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் வாயு மண்டலத்தில் அதிகரித்து வரும் கரியமில வாயுவை ஈர்ப்பதற்கு உதவியாக இருக்கும். கடந்த மார்ச் மாதம் 31 முடிய டி.என்.பி.எல்., நிறுவனம் 51 ஆயிரத்து 220 ஏக்கரில் கூழ்மரங்களை நடவு செய்துள்ளது.

இதுமட்டுமின்றி பல எரிதி மேம்பாட்டு தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்தி கரியமில வாயுவின் அளவு வெளியாவதை குறைத்துள்ளது. காகித உற்பத்தியில் உள்ள நிறுவனங்களில் டி.என்.பி.எல்., நிறுவனத்தின் மேற்குறிப்பிட்ட செயல்திட்டங்களை அங்கீகரித்து பாராட்டும் விதமாக 2009-10ம் ஆண்டுக்கான பசுமை தொழில் நுட்பத்துக்கான முன்னோடி விருது வழங்கப்பட்டுள்ளது.

உலக சுற்றுச்சூழல் தினமான கடந்த ஐந்தாம் தேதி டில்லியில் நடந்த விழாவில் மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிதித் துறை அமைச்சர் ஃபரூக் அப்துல்லா பசுமை தொழில் நுட்பத்துக்கான முன்னோடி விருதை டி.என்.பி.எல்., மேலாண்மை இயக்குனர் ராமச்சந்திரனிடம் வழங்கினார்.

**தோகமலை பகுதியில் சப்போட்டா சாகுபடி மானியம் பெறஅழைப்பு**

குளித்தலை: "தோகமலை யூனியன் பகுதியில் சப்போட்டா பயிரிடும் விவசாயிகளுக்கு உற்பத்தி பெருக்கு திட்டத்தில் மானியம் வழங்கப்படுகிறது,'என தோகமலை வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சிந்தாமணி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கரூர் மாவட்டத்தில் தோகமலை யூனியன் வறட்சி நிறைந்த பகுதியாக உள்ளது. இங்கு ஆற்றுப்பாசனம் இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள் கிணற்று நீர் பாசனத்தை நம்பியுள்ளனர். தற்போது தோட்டக்கலைத்துறை மூலம் மா, வாழை, நெல்லி, சப்போட்டா மற்றும் பணப்பயிர்களான கத்தரி, வெண்டை, தக்காளி போன்ற பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர்.

தோகமலை யூனியன் பகுதிகளான பாதிரிப்பட்டி, தெலுங்குப்பட்டி, பழனிகவுண்டம்பட்டி, திருப்பாத்தியூர், நாகலூர், பேரூர், கள்ளை மற்றும் கல்லடை போன்ற கிராமங்களில் சுமார் 39 ஏக்கர் நிலப்பரப்பில் சப்போட்டா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. சப்போட்டா சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில், தோட்டக்கலைத்துறை மூலம் சப்போட்டா பயிடும் விவசாயிகளுக்கு குறைந்த நீரில் அதிக பரப்பளவில் விவசாயம் செய்ய சொட்டுநீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு 2010-11ம் ஆண்டுக்கான உயர் தொழில் நுட்ப உற்பத்தி பெருக்கு திட்டத்தில் சப்போட்டா உற்பத்தியை பெருக்கும் வகையில் ஒரு விவசாயிக்கு ஆறு ஹெக்டர் பரப்பளவில பயிரிட சப்போட்டா கன்றுகள் தேவையான உரங்கள் ஆகியன ஏழாயிரத்து 500 மதிப்பில் மானியமாக வழங்கப்பட உள்ளது.இந்ந திட்டத்தில் விவசாயிகள் பயனடைய தங்களது சிட்டா, பட்டா மற்றும் உரிய ஆவணங்களுடன் தோகமலை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனரை அணுகி பயன்பெறலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**ஜப்பானிய காடை வளர்ப்பு இலவச பயிற்சி பெற அழைப்பு**

கரூர்: கரூர் மாவட்டம் பண்டுதகாரன்புதூரில் செயல்படும் கா ல்நடை பல்கலை பயிற்சி மற்று ம் ஆராய்ச்சி மைய வளாகத்தில், ஜூன் 17ம் தேதி ஒரு நாள் "இறைச்சிக்கான ஜப்பானியக் காடை வளர்ப்பு' பயிற்சி நடக்கிறது.

காடை வளர்ப்பு, பண்ணை வீட்டமைப்பு, தீவன மேலாண்மை, நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணைப் பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்பட்டு, களப்பயிற்சியும் வழ ங்கப்படுகிறது. பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர் அன்று கா லை 10 மணிக்கு பயிற்சி மைய வளாகத்துக்கு வந்துவிட வேண்டும். பயிற்சியில் பங்கேற்பதுக்கு, 04324-294335 என்ற தொ லைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்துக்கொள்ளலாம். இவ்வாறு கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் இணைப்பேராசிரியர் செந்தில்வேல் தெரிவித்துள்ளார்.

**பருவமழையால் அணைகளில் நீர்மட்டம் உயர்வு**

பொள்ளாச்சி : மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. இதனால், பி.ஏ.பி., பாசன திட்டத்திலுள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பொள்ளாச்சி, வால்பாறை சுற்று வட்டாரப்பகுதிகளில், கடந்த இரு நாட்களாக தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்யும் கனமழை காரணமாக, பரம்பிக்குளம் ஆழியாறு பாசனத்திட்டத்தின் கீழ் வரும் அணைகளுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

சோலையாறு அணையின் 160 அடி உயரத்தில், 39.40 அடியாக நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு இரண்டாயிரத்து 492 கன அடி நீர் வரத்து உள்ளது. அணையிலிருந்து நீர் வெளியேற்றப்படவில்லை. ஒரே நாளில் அணை நீர்மட்டம் 12 அடி உயர்ந்துள்ளது.

பரம்பிக்குளம் அணையின் 72 அடி உயரத்தில், 16.82 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு வினாடிக்கு 215 கன அடி நீர் வருகிறது. 810 கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. ஆழியாறு அணையின் 120 அடி உயரத்தில், 93.60 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு, வினாடிக்கு 258 கன அடி நீர் வரத்தாகவும், 315 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது.

திருமூர்த்தி அணையின் 60 அடி உயரத்தில் 16.23 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு 598 கன அடி தண்ணீர் வரத்தாகவும், ஆயிரத்து 26 கன அடி தண்ணீர் வெளியேற்றமாகவும் உள்ளது. அமராவதி அணையின் 90 அடி உயரத்தில் 33.14 அடி நீர்மட்டம் உள்ளது. அணைக்கு, ஆயிரத்து 483 கன அடி தண்ணீர் வருகிறது. அணையிலிருந்து தண்ணீர் வெளியேற்றப்படவில்லை.

நேற்று காலை 8.00 மணி வரை பதிவான மழையளவு வருமாறு: சோலையாறு - 176 மி.மீ., பரம்பிக்குளம் - 93, ஆழியாறு - 17, திருமூர்த்தி - 10.5, அமராவதி - 3, மேல் நீராறு - 143, கீழ் நீராறு - 112, மேல் ஆழியாறு - 15.6, காடம்பாறை-20, வால்பாறை - 96, வேட்டைக்காரன்புதூர் - 20.3, மணக்கடவு - 25.8, நல்லாறு - 15, பொள்ளாச்சி - 20, நவமலை - 12.6, சர்க்கார்பதி - 45, தூணக்கடவு - 89, பெருவாரிபள்ளம் - 98 மி.மீ., என்ற அளவில் மழை பெய்தது.

**சாண எரிவாயு கலன் அமைக்க அழைப்பு**

பொள்ளாச்சி : "பொள்ளாச்சி பகுதிகளில் சாண எரிவாயு கலன் அமைக்க விரும்புவோர், ஒன்றிய அதிகாரிகளை நேரடியாக தொடர்பு கொண்டு விண்ணப்பிக்கலாம்' என, அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பொள்ளாச்சி தெற்கு மற்றும் ஆனைமலை ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் சாண எரிவாயு கலன் அமைக்க இலக்கு நிர்ணயிக்கபட்டுள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திற்கும் தலா 10 சாண எரிவாயு கலன் அமைக்கப்படும். இதில், தலா மூன்று கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இலக்கை எட்ட பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஒன்றிய அதிகாரிகள் கூறியதாவது: சாண எரிவாயு கலனை எந்த பகுதியில் வேண்டுமானாலும் அமைக்கலாம். நான்கு பேர் கொண்ட ஒரு குடும்பத் திற்கு இரண்டு மீட்டர் எடையுள்ள கலன் அமைக்கலாம். இந்த கொள்ளளவில் கலன் அமைக்க இரண்டு அல்லது மூன்று மாடுகள் வைத்திருக்க வேண்டும். மழை, வெயில் போன்ற எந்த இயற்கை சீற்றத்தின் போதும் சாண எரிவாயு கலனை பயன்படுத்த முடியும். காஸை காட்டிலும் சாண எரிவாயு கலனில் சமைக்கும் போது குறைந்த வாயு மட்டுமே பயன்படும். இதில், சமைக்கும் போது ஆரோக்கியமாக இருப்பதோடு, எவ்விதமான வாசனையும் ஏற்படாது.

கலனிலிருந்து வெளிவரும் கழிவு உரத்தினை சேமிக்கும் குழியில் கழிவு உரம் நிறைந்தவுடன் அதை வயலுக்கு பயன்படுத்தலாம். கலன் அமைக்க ஊக்குவிக்கும் வகையில், ஒவ்வொரு

பயனாளிகளுக்கும் எட்டாயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இரண்டு மீட்டர் கலன் அமைக்க ரூ.12 ஆயிரம் வரை செலவாகும். கொள்ளளவு அதிகரிக்கும் போது தொகையும் அதிகரிக்கும். கலன் அமைக்க ஆர்வமுள்ள பயனாளிகள் ஊராட்சி தலைவரையோ, மக்கள் நலப் பணியாளர்களையோ, ஒன்றிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு விளக்கம் கேட்டு பெறலாம். விருப்பமுள்ள பயனாளிகளுக்கு ஒன்றியங்களில் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் பரீசிலிக்கப் பட்டு உடனடியாக மானியமும், கலன் அமைக்கவும் ஏற்பாடு செய்யப்படும். இவ்வாறு, ஒன்றிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பெரியாறு அணை நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி உயர்வு பெரியாறில் 14 செ.மீ., மழை பதிவு**

கூடலூர்: பெரியாறு அணை நீர்பிடிப்பில் நேற்று பெய்த கன மழையால் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் ஒரு அடி உயர்ந்தது. கேரளாவில் தென்மேற்கு பருவ மழை துவங்கி பல நாட்களாகியும் பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைவாகவே இருந்தது. இந்நிலையில் நேற்று கனமழை பெய்தது. இந்த மழையால் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 1503 கன அடியாக உயர்ந்தது. பெரியாறில் அதிகபட்சமாக 14 செ.மீ.,(140 மி.மீ.,) மழை பதிவானது. தேக்கடியில் 6.84 செ.மீ., கூடலூரில் 3.1 செ.மீ., மழை பதிவாகியுள்ளது. அணையில் நீர் இருப்பு 1118 மில்லியன் கன அடியாகும். திடீரென பெய்த கன மழையால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நேற்று முன்தினம் 110.50 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று ஒரு நாளில் ஒரு அடி உயர்ந்து நேற்று காலை நிலவரப்படி 111.30 அடியாக இருந்தது. தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் மேலும் உயரும் வாய்ப்புள்ளது. நீர்மட்டம் உயருவதால் முதல் போக நெல் சாகுபடிக்கு அணையில் இருந்து விரைவில் நீர் திறக்கும் வாய்ப்புள்ளதால் விவசாயிகள் நாற்றாங்கால் அமைக்கும் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்.

**ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் மூலம் விவசாய விளைபொருட்கள் விற்பனை**

மதுரை: மதுரை, திருமங்கலம், உசிலம்பட்டி, வாடிப்பட்டி ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் மூலம் விவசாய விளை பொருட்களை இருப்பு வைத்து, இடைத்தரகர் இன்றி மொத்த வியாபாரிகளுக்கு நேரடி விற்பனை செய்யலாம். நெல்,பருத்தி அல்லது பஞ்சு, நிலக்கடலை, கரும்பு அல்லது வெல்லம், சோளம், கம்பு, கேழ்வரகு, வெங்காயம், தக்காளி, திராட்சை, மா, மிளகாய் வத்தல், எள், தேங்காய், வாழை, உளுந்து, துவரை, உருளைக்கிழங்கு, புளி மற்றும் பல்வேறு விளைபொருட்களை தரகு, மகிமையின்றி மறைமுக ஏலத்தின் மூலம் அதிக விலைக்கு

விற்பனை செய்யலாம். தொகையை அன்றே பெற்றுக் கொள்ளலாம்.மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், நெல் வணிக வளாகம், மாட்டுத்தாவணி, மதுரை- 0452- 258 0379, 98944- 42348; கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், விடத்தக்குளம் ரோடு, திருமங்கலம்- 045 49- 280 731, 94421- 86762; மேற்பார்வையாளர், ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், மதுரை ரோடு, உசிலம்பட்டி- 045 52-251 070, 95434- 75854; கண்காணிப்பாளர், ஒழுங்குமுறை விற்பனைக்கூடம், டி.ஆண்டிபட்டி, வாடிப்பட்டி- 95434- 75854 ல் தொடர்பு கொள்ளலாம் என விற்பனைக்குழு செயலாளர் பாஸ்கரராஜ் தெரிவித்துள்ளார்.

**மழையால்...குளுகுளு சீசன்! கிராமங்களில் விவசாய பணிகள் சூடுபிடிப்பு**

உடுமலை : தென்மேற்கு பருவமழை உடுமலை, பொள்ளாச்சி, வால்பாறை பகுதிகளில் தீவிரமடைந்து வருகிறது. இதனால் கோடை வெயில் விடை பெற்று குளு... குளு சீசன் துவங்கியுள்ளது.

உடுமலை பகுதியில் வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாமல் கோடை வெயிலும் முன்னதாகவே துவங்கியது. லைலா புயலையொட்டி தமிழகத்தில் பரவலாக மழை பெய்தாலும் உடுமலை பகுதியில் குறைந்தளவு மழையே கிடைத்தது. வறட்சியான சீசன் தொடர்ந்ததால் மக்கள் அவதிக்குள்ளாகி வந்தனர். மழை இல்லாமல் நிலத்தடி நீர் மட்டம் சரிந்ததால் விவசாயிகள் வேதனையடைந்தனர். அமராவதி அணை வறண்டதால், திருப்பூர், கரூர் மாவட்டத்திலுள்ள அணை மூலம் பாசன வசதி பெறும் 54 ஆயிரத்து 647 ஏக்கர் நிலங்களின் முதல் போக சாகுபடி கேள்விக்குறியானது.

அணை நீர் மட்டம் அதல பாதாளத்தில் இருந்ததால், வழக்கமாக ஜூன் 1ல் அமராவதி பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு தண்ணீர் திறக்கவில்லை. கேரள மாநிலத்தில் மே 30 ல் பருவமழை துவங்கும் என தெரிவிக்கப்பட்டது. இதனால், ஜூன் முதல் வாரத்திலேயே பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, வால்பாறை, உடுமலை பகுதியில் பருவமழை துவங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. சிறிது காலதாமதமாக துவங்கி கடந்த 2 நாட்களாக பருவமழை உடுமலை பகுதியில் தீவிரமடைந்து வருகிறது.

நாள் முழுவதும் குளிர்காற்றுடன், சாரல் மழை தொடர்ந்து பெய்கிறது. மேகமூட்டத்தால் வெயிலின் தாக்கம் முற்றிலுமாக குறைந்துள்ளது. பரவலாக அனைத்து பகுதிகளிலும் கடந்த

இரண்டு நாட்களாக மழை பெய்து வருகிறது. மழை தீவிரமடைந்து தொடரும் நிலையில் நிலத்தடி நீர் மட்டத்திற்கு உதவும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

பொள்ளாச்சி: பொள்ளாச்சியில் இரண்டு நாட்களாக பரவலாக மழைபெய்கிறது. சமவெளிப்பகுதியில் மழை பொழிவு சற்று குறைவாகவே உள்ளது. இருந்தாலும், விவசாயிகள் நிலத்தை உழுது மானாவரி சாகுபடியை துவங்கியுள் ளனர். நிலக்கடலை, தட்டை, உளுந்து, சோளம் போன்றவற்றை விதைத்துள்ளனர். கிராமங்களில் விவசாய பணிகள் சூடுபிடித்துள்ளது. இரண்டு நாட்களாக பெய்து வரும் மழையினால், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பொள்ளாச்சி சுற்றுப்பகுதிகளில், பெய்த மழையினால் ஒரு சில இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்தன. பொள்ளாச்சி - கோவை ரோட்டில் வடக்கிபாளையம் அருகே மரம் முறிந்து விழுந்தது. காலை நேரத்தில், போக்குவரத்து குறைவாக இருந்ததால், போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்படவில்லை.

விவசாயிகள் கூறுகையில், "பொள்ளாச்சி பகுதியில் சித்திரை பட்டத்திற்கு நான்கு முறை மழை கிடைக்கும். கடந் தாண்டு வடகிழக்கு, தென்மேற்கு பருவ காலத்தில் மழை பெய்யாததால் விவசாயிகள் ஏமாற்றம் அடைந்தனர். இந்தாண்டு, தாமதமானாலும் எதிர்பார்த்தபடி மழை பெய்ய துவங்கியுள்ளதால் விவசாய பணிகளில் விறுவிறுப்பாக ஈடுபட்டுள்ளனர். துவக்கத்திலேயே மழை சீசன் நல்லபடியாக உள்ளதால், பருவகாலத்தில் மழை தீவிரமடையும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது' என்றனர்.

வால்பாறை: வால்பாறையில் கடந்த இரண்டு நாட்களாக இடைவிடாது பெய்த கன மழையின் காரணமாக பொள்ளாச்சி - வால்பாறை மெயின்ரோடு, வால்பாறை - சோலையாறு அணை மெயின்ரோடு, வால்பாறை - சின்னக்கல்லார் மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் மரம் விழுந்து பல மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. நள்ளரவில் இடைவிடாது பெய்த மழையினால் வால்பாறை டவுன் வாழைத்தோட்டம் பகுதியில் நூறு ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்ட ஜூப்லி பாலம் இடிந்து விழுந்தது.

வால்பாறையை சுற்றியுள்ள பல்வேறு எஸ்டேட்டுகளில் காற்றுடன் கன மழை பெய்ததால் நூற்றுக்கும் மேற்பட்ட மரங்கள் மின் கம்பத்தின் மீது சாய்ந்ததால் பல்வேறு எஸ்டேட்டுகள் இருட்டில் மூழ்கின. மின் ஊழியர்கள் மின் கம்பத்தின் மீது விழுந்த மரத்தை அகற்றி துண்டிக்கப்பட்ட பகுதிகளுக்கு மீண்டும் மின் இணைப்பு வழங்கினர். வால்பாறையில்

சந்தைநாளான நேற்று ஞாயிற்றுக்கிழமை எஸ்டேட் பகுதியிலிருந்து வந்த மக்கள் கன மழையினால் காய்கறி வாங்க முடியாமல் தவித்தனர்.

தொடர் மழையின் காரணமாக வால்பாறை மக்களின் இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டது.

**கொப்பரை தொழிலாளர்கள் வேலையிழப்பு**

பல்லடம் : பல்லடம், சுல்தான் பேட்டை பகுதியில் கடந்த நான்கு நாட் களாக அவ்வப்போது பெய்து வரும் சாரல் மழை காரணமாக, ஆயிரத்திற்கும் மேற்பட்ட கொப்பரை தொழிலா ளர்கள் தற்காலிகமாக வேலை இழந்துள்ளனர். பல்லடம், சுல்தான் பேட்டை பகுதியில் 150க்கும் மேற்பட்ட கொப்பரை உற்பத்தி களங்கள் உள்ளன. இக் களங்களில் உற்பத்தி செய்யப்படும் கொப் பரை, பல்லடம் மற்றும் செஞ்சேரிமலையில் உள்ள அரசு கொப் பரை கொள்முதல் மையங்கள் மற்றும் காங்கயம், வெள்ள கோவில் எண்ணெய் மில்களுக்கு விற்பனை செய்யப்படுகிறது. அரசு கொள்முதல் மையத்தில் ஒரு கிலோ 44.50 ரூபாய்க்கு கொள் முதல் செய்யப்படுகிறது. பல்லடம், சுல் தான் பேட்டை பகுதியில் கட ந்த நான்கு நாட் களாக அவ்வப் போது சாரல் மழை அடித்து வருகிறது. மேலும், வெப்பம் குறைந்து குளிர்ந்த காற்று அடித்து வருகிறது. கொப்பரை உற் பத்திக்கு தேவையான வெப்பம் கிடைக்கவில் லை. மழை சாரல், போதிய வெப்ப நிலையின்மை காரணமாக, பல்லடம் மற்றும் சுல்தான்பேட் டை பகுதிகளில் உள்ள கொப்பரை உற்பத்தி களங்களில் வேலை பார்த்து வந்த, 1,000க் கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தற்காலிகமாக வேலை இழந்துள்ளனர். 20 லட்சம் ரூபாய் மதிப் புள்ள கொப்பரை உற் பத்தி இழப்பும் ஏற்பட்டுள்ளது.

**கோடை காலத்தில் உளுந்து பயிரிட்டு சாதனை : முன்னாள் அமைச்சர் சோதனை முயற்சி**

ஜூன் 14,2010,00:00 IST

காரைக்கால்: காரைக்காலில் சோதனை முயற்சியாக கோடை காலத்தில் உளுந்து பயிரிட்டு முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் கமலக் கண்ணன் சாதனை படைத்து வருகிறார். விவசாயிகள் உளுந்து பயிரிட வேளாண்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார்.காவிரியின் கடைமடை பகுதியான காரைக்காலில் நெல் சாகுபடியே அதிகம். ஆற்று நீர் பாசனத்தை நம்பியே விவசாயம் நடப் பதால் ஆண்டு ஒரு முறை மட் டுமே நெல் சாகுபடி நடக்கும். நெல் சாகுபடி முடிந்த வயலில் எந்த மாற்றமும் செய்யாமல் உளுந்து சாகுபடி நடக்கும்.இதற்கு மாற்று வழியாக காரைக்கால் அடுத்த நல்லம்பல் கிராமத்தில் முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் கமலக் கண் ணன் சோதனை முயற்சியாக தன் னுடைய 6 ஏக்கர் நிலத்தில் உளுந்து பயிரிடுள்ளார். உளுந்து பயிர்கள் நன்கு வளர்ந்து செழித்து

காணப்படுகிறது.கோடை காலத்தில் குழாய் நீர் பாசனம் மூலம் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. நிலத்தை உழுது பயிர் விதைக்கப்படுகிறது. 10 நாட்கள் கழித்து டி.ஏ.டி., உரம் இடப்பட்டு செடிகளில் இடையே உள்ள களை எடுக்கப்படுகிறது. பின் 50 நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை களை பறிக்கப்படுகிறது. இந்த முறையில் பயிரிடப் பட்டுள்ள உளுந்துகள் 65 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடுகிறது. உளுந்து பயிரிடுவதன் மூலம் உளுந்து பயிர்கள் காற்றில் உள்ள நைட்ரேட்டை வேர் முடுச் சுகள் வழியாக மண்ணில் சேமித்து வைக்கிறது. இது மறைமுகமாக மண்ணை வளப்படுத்துகிறது.

ஒரு ஏக்கருக்கு உரம், ஆட்கள் கூலி, உழுதல் உள்ளிட்ட பணிகளுக்காக சுமார் 4000 ரூபாய் செலவு ஆகிறது. ஒரு ஏக்கரில் உளுந்து அறுவடை செய்தால் சாராசரியாக 3 முதல் 4 குவிண் டால் வரை கிடைக்கிறது. ஒரு குவிண்டால் உளுந்து 5500 முதல் 6000 ரூபாய் வரை விற்கப்படுகிறது. செலவு போக ஒரு ஏக்கருக்கு 10 ஆயிரத்தில் இருந்து 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது.காரைக்காலில் கோடை காலமான மே, ஜூன் மாதத்தில் உளுந்து பயிரிடப்படுவதில்லை. சோதனை முயற்சியாக முன்னாள் விவசாயத்துறை அமைச்சரின் இந்த முயற்சியால் பயிரிடப் பட்ட உளுந்து தற்போது செழித்து வளர்வதால், குறு விவசாயிகள், குழாய்நீர் பாசனத்தைப் பயன்படுத்தும் விவசாயிகள் உளுந்து பயிரிட்டு அதிக லாபம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.இது குறித்து முன்னாள் விவசாயத்துறை அமைச்சர் கமலக்கண் ணன் கூறுகையில், காரைக்காலில் சோதனை முயற்சியாக கோடை காலமான மே, ஜூன் மாதத்தில் உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. குழாய் கிணறு பாசனம், ஆற்று நீரை தேக்கி வைத்து பாசனம் செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் உளுந்து பயிரிடலாம். இந்த பயிர் குறைந்த முதலீட்டில், குறைந்த காலத்தில் அறுவடைக்கு தயாராகி விடுகிறது. அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிராகவும் உள்ளது. எனவே புதுச்சேரி அரசு அதிக லாபம் தரக்கூடியதும், விரைவில் அறுவடைக்கு தயாராகும் இதுபோன்ற பயிர்களை விவசாயிகள் பயிரிட பயிற்சி அளித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றார்.

**மீன் கண்காட்சியில் 300 வகை மீன்கள்**

ஜூன் 14,2010,00:00 IST

புதுச்சேரி; புதுச்சேரியில் நடந்து வரும் மீன் கண்காட்சியில் 300 வகையான மீன்கள் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட்டுள்ளது.புதுச்சேரி மீன் வளத்துறை சார்பில் அண்ணா திடலில் மீன் கண்காட்சி கடந்த 3 நாட்களாக நடந்தது. இதில் இந்தியா மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்த 300 வகையான மீன்கள் இடம் பெற்றுள்ளன. பொது மக்கள் மற்றும் சிறுவர்கள் ஆர்வத்துடன் வந்து கண் காட்சியை பார்த்தும், மீன்களை வாங்கியும் செல் கின்றனர்.குறிப்பாக அமெரிக்கா வகையான ப்ளூ டான்பின் என்ற மீன் முதன் முறையாக தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டு,

கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. ஐந்து கலர் கொண்ட பீக்காக் மீன், தாய்லாந்து குரான் ஏஞ்சல் (இந்த மீன் வாலில் பிஸ்மில்லா என இருக்கும்), லைன் மீன், சில்வர் அரோனா, பிலவர் ஹோஸ்ட் என்ற வாஸ்து மீன் உள்ளிட்ட பல்வேறு வகையான மீன்கள், கோல்டு, பிளாக், ஒயிட் போன்ற வண்ண மீன்களும் கண்காட் சியில் இடம் பெற்றன. மீன் வளர்ப்பில் ஆர்வம் உள்ள அனைவரும் ஆர்வத்தோடு பல வகையான, வண்ண மீன்களை வாங்கிச் சென்றனர்.

தினத்தந்தி

***வருவாய் வாய்ப்புகள் அதிகமாக உள்ளதால் ஆப்பிரிக்காவில் வேளாண் துறையில் களமிறங்கி வரும் இந்திய நிறுவனங்கள்***



*இஷானி டட்டா குப்தா – சுதானுகா கோசல்*
*புதுடெல்லி / கொல்கத்தா*

*ஆப்பிரிக்க நாடுகளில் வேளாண் துறைக்கு வளமான வர்த்தக வாய்ப்பு உள்ளது. இந்தியாவுடன் ஒப்பிடும்போது, குறிப்பாக தேயிலை தோட்டங்கள் அமைப்பதற்கான நிலங்கள் குறைந்த விலையில் கிடைக்கின்றன. இதனையடுத்து, பல இந்திய நிறுவனங்கள், ஆப்பிரிக்க நாடுகளில் வேளாண் துறையில் களமிறங்கி சாதனை படைத்து வருகின்றன.*

*ரோஜா மலர்கள்*

*இதற்கு சிறந்த முன்னுதாரணமாக பெங்களூரைச் சேர்ந்த தொழில் அதிபர் சாய் ராமகிருஷ்ணா கருத்துரியை எடுத்துக்கொள்ளலாம். இவர், ஆப்பிரிக்க நாடுகளில் நிலங்களை கையகப்படுத்தி, அவற்றில் ரோஜா மலர்களை பயிரிட்டு வருகிறார். இவரது தலைமையின் கீழ் செயல்படும் நிறுவனம், ரோஜா மலர்கள் உற்பத்தியில், உலக அளவில் முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.*

*தென் ஆப்பிரிக்காவில் ஜோஹன்ஸ்பர்கில் உலக கோப்பை கால்பந்து போட்டி நடைபெற்று வருகிறது. இந்த போட்டியின் தொடக்கவிழாவை, இவருக்கு சொந்தமான எத்தியோப்பியா தோட்டத்தில் உள்ள ரோஜா மலர்கள்தான் அலங்கரித்தன என்பது நம் நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளது.*

*70 இந்திய நிறுவனங்கள்*

*இவரது அடிச்சுவட்டை பின்பற்றி சுமார் 70 இந்திய நிறுவனங்கள் ஆப்பிரிக்க நாடுகளில், வேளாண் துறையில் கால் பதித்துள்ளன. எத்தியோப்பியா, மாளவி, கென்யா, உகாண்டா,*

லைபீரியா, கானா, காங்கோ, ருவாண்டா ஆகிய ஆப்பிரிக்க நாடுகள், இந்திய நிறுவனங்களுக்கு சிறந்த வர்த்தக வாய்ப்பை அளிக்கின்றன.

இந்தியாவின் ஆர்.கே. கார்ப்பரேஷன் நிறுவனம், உகாண்டா மற்றும் கென்யா உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளில் பால் பொருள்கள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறது. இந்நிறுவனம், இதற்காக அந்நாடுகளில் 50 ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளது.

உகாண்டா

டாட்டா குழுமத்தைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றும் வேளாண் துறையில் ஈடுபடுவதற்காக உகாண்டாவில் நிலத்தை குத்தகைக்கு எடுத்துள்ளது. கட்டுமானத் துறையில் ஈடுபட்டு வரும் சபூர்ஜி பல்லோன்ஜி – கோ என்ற நிறுவனம், வேளாண் துறையில் களமிறங்குவதற்காக எத்தியோபிப்பியாவில் 50,000 ஹெக்டேர் நிலத்தை நீண்ட கால குத்தகை அடிப்படையில் கையகப்படுத்தி உள்ளது.

பெரிய நிறுவனங்கள் மட்டுமின்றி, நறுமணப் பொருள்கள் முதல் ரசாயன பொருள்கள் வரை பல்வேறு வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் சிறிய நிறுவனங்களும், ஆப்பிரிக்க நாடுகளில் வர்த்தக ரீதியாக விவசாயம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றன.

தேயிலை உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வரும் பல இந்திய நிறுவனங்கள், ஆப்பிரிக்க நாடுகளில் நிலங்களை கையகப்படுத்துதற்காக அணிவகுத்து நிற்கின்றன. இதற்கு சிறந்த முன்னுதாரணமாக மெக்லியோடு ரஸ்ஸல் இந்தியா நிறுவனத்தை எடுத்துக் கொள்ளலாம். இது, ஒருங்கிணைந்த தேயிலை உற்பத்தியில் உலகின் மிகப் பெரிய நிறுவனமாகத் திகழ்கிறது.

தேயிலை பண்ணைகள்

இந்நிறுவனம், இத்துறையில் தலைசிறந்து விளங்குவதற்காக, உகாண்டாவைச் சேர்ந்த ரவன்ஸோரி டீ இன்வெஸ்ட்மெண்ட்ஸ் நிறுவனத்தை ரூ.117 கோடிக்கு கையகப்படுத்தி உள்ளது. ரவன்ஸோரி டீ இன்வெஸ்ட்மெண்ட் நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஆறு தேயிலை பண்ணைகள் உள்ளன. இந்நிறுவனம், ஆண்டுக்கு 1.50 கோடி கிலோ தேயிலை உற்பத்தி செய்கிறது. இந்நிறுவனத்தை கையகப்படுத்தியதன் வாயிலாக, தேயிலை வர்த்தகத்தில் ஆப்பிரிக்காவில் வலுவாக காலூன்ற முடியும் என்று மெக்லியோடு நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஆதித்யா கேதான் தெரிவித்தார்.

பீ.கே. பிர்லா தலைமையின் கீழ் செயல்படும் ஜெய்ஸ்ரீ டீ – இண்டஸ்ட்ரீஸ், கிழக்கு ஆப்பிரிக்காவில் மூன்று தேயிலை தோட்டங்களை கையகப்படுத்தி உள்ளது. இது, குறித்து இந்நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் பீ.பி.மகேஸ்வரி கூறும்போது, “ஆப்பிரிக்காவில் நிறுவனம் புதிதாக கால் பதித்துள்ளது. ஆப்பிரிக்காவில் மேலும் விரிவாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள நிறுவனம் விரும்புகிறது” என்று தெரிவித்தார்.

மேலும், இந்தியாவைச் சேர்ந்த ரோஸ்ஸல் டீ நிறுவனமும், கென்யா, தான்சானியா மற்றும் மாளவி ஆகிய ஆப்பிரிக்க நாடுகளில் தேயிலை தோட்டங்களை கையகப்படுத்துவதற்கான வாய்ப்புகளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றன.

பருப்பு வகைகள்

இந்திய நிறுவனங்கள், தோட்டக் கலை, பூக்கள் வர்த்தல் ஆகிய வேளாண் நடவடிக்கைகளில் தீவிரமாக இறங்கி உள்ளன. மேலும், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியிலும் ஈடுபட முடிவு செய்துள்ளன. இந்தியாவில் இவற்றிற்கான தேவைப்பாடு மிகவும் அதிகமாக உள்ளது. எனவே, பருப்பு வகைகளை அந்நாடுகளில் உற்பத்தி செய்து இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்து லாபம் ஈட்ட முடியும்.

இது குறித்து புதுடெல்லியில் அமைந்துள்ள உகாண்டா தூதரகத்தின் உயர் அதிகாரி நிமிஷா மத்வாணி கூறுகையில், “உகாண்டா நாடு, வேளாண் உற்பத்திக்காக இந்திய நிறுவனங்களுடன் கூட்டுத் திட்டங்களை மேற்கொள்ள மிகவும் ஆர்வமாக உள்ளது. குறிப்பாக, உணவு பதப்படுத்தும் துறையில் ஈடுபட மிகவும் விரும்புகிறது. இந்திய நிறுவனங்களுடன் எங்களது

*தொழில்நுட்பங்களையும் பகிர்ந்து கொண்டு வெற்றி பெற விரும்புகிறோம்” என்று தெரிவித்தார்..*

***தமிழகத்தில் பருத்தி சாகுபடி பரப்பளவு சரிவடைகிறது?***

*சுஜாதா எஸ்*
*கோயம்புத்தூர்*
*தமிழ்நாட்டில் பருத்தி பயிரிடும் பரப்பளவு சரிவடைந்து வருவதாக தெரிகிறது. நாட்டின் மொத்த பருத்தி உற்பத்தியில் தமிழ்நாடு, கர்நாடகா மற்றும் ஆந்திரா ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு, ஒட்டுமொத்த அளவில் 7 சதவீதமாக உள்ளது.*
*புள்ளிவிவரம்*
*பருத்தி ஆலோசனை வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தின்படி, கடந்த 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில், தமிழ்நாட்டில் 1.09 லட்சம் ஹெக்டேரில் பருத்தி சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. இது, சென்ற 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் 1.04 லட்சம் ஹெக்டேராக சரிவடைந்தது. நடப்பு 2010–11–ஆம் ஆண்டு பருவத்தில் 95,000 ஹெக்டேர் பரப்பளவில்தான் பருத்தி சாகுபடி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.*
*பருத்திக்கு நல்ல விலை கிடைக்க வாய்ப்புள்ளது என்றாலும், தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக பருத்தி பயிரிடும் பரப்பளவு குறைந்து வருவதற்கான காரணம் சரியாக தெரியவில்லை. இதனால் விவசாயிகள் அதிக லாபம் தரும் பயிர்களில்தான் கவனம் செலுத்துகின்றனர் என்று கூற இயலாது. ஆனால், தொழிலாளர்கள் பற்றாக்குறையை எதிர்கொள்வதில் கவனம் செலுத்துகின்றனர். மாற்றுப் பயிர்களான பருப்பு வகைகள், கரும்பு மற்றும் நெல்லுக்கு தேவைப்பாடு நன்கு உள்ளது என தென்னிந்திய பருத்தி சங்கத்தின் செயலாளர் கே.என்.விஸ்வநாதன் தெரிவித்தார். இச்சங்கம் கோயம்புத்தூரில் தலைமை அலுவலகத்தை கொண்டு செயல்பட்டு வருகிறது.*
*அண்மைக் காலமாக பருத்தி விலை உயர்ந்து வருகிறது. எனவே, ஆந்திர மாநிலத்தில், நடப்பு ஆண்டில் பருத்தி சாகுபடி பயிரிடும் பரப்பளவு கணிசமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இங்கு சென்ற ஆண்டு கரீஃப் பருவத்தில் பருத்தி உற்பத்தி 55 லட்சம் பொதிகளாக இருந்தது. இது, இவ்வாண்டு கரீஃப் பருவத்தில் 62 லட்சம் பொதிகளாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பொதி என்பது 170 கிலோ பருத்தியைக் கொண்டதாகும்.*
*கர்நாடகா*
*கர்நாடக மாநிலத்தில் மக்காச்சோளம் மற்றும் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யும் நிலப்பரப்பில் 25 சதவீதம் பருத்தி சாகுபடிக்கு மாற்றம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இது ஹசன் மாவட்டத்தில்தான் அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது. இதே போன்று இஞ்சி பயிராகும் பரப்பளவிலும் கணிசமான பகுதி பருத்தி சாகுபடிக்கு மாறும் என தெரிகிறது. தேவநாகரி மாவட்டத்தில் பருத்தி சாகுபடி நிலப்பரப்பு 40,000 ஹெக்டேராக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, சென்ற பருவத்தில் 30,000 ஹெக்டேராக இருந்தது.*

***‘இந்திய பொருளாதாரத்தில் 8.7% வளர்ச்சி ஏற்படும்’ஆசிய மேம்பாட்டு வங்கி கருத்து***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*கொல்கத்தா*
*நடப்பு 2010–11–ஆம் நிதி ஆண்டில், பொருளாதார வளர்ச்சியை எடுத்துக்காட்டும் நாட்டின்*

மொத்த உள்நாட்டு உற்பத்தி 8.7 சதவீதம் அதிகரிக்கும் என ஆசிய மேம்பாட்டு வங்கி மதிப்பீடு செய்துள்ளது. சென்ற நிதி ஆண்டில், நாட்டின் பொருளாதாரத்தில் 7.4 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சர்வதேச அளவில் பொருளாதாரத்தில் மீண்டும் உருக்குலைவு ஏற்படாது என்றும், அதேசமயம், உலக நாடுகள் பொருளாதார மந்தநிலையிலிருந்து படிப்படியாகத்தான் மீளும் என்றும் ஆசிய மேம்பாட்டு வங்கியின் தலைமை நிர்வாக இயக்குனர் ரஜத் நாக் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறும்போது, “இந்திய பொருளாதாரம் தற்சார்புடையது. உள்நாட்டு தேவைப்பாட்டை இலக்காகக் கொண்டது. ஏற்றுமதியை முற்றிலும் நம்பி இருக்கவில்லை. இதனால், இந்திய பொருளாதாரத்தில் நல்ல அளவில் வளர்ச்சி ஏற்படும்” என்று தெரிவித்தார்.

இவ்வங்கி, கடந்த 2006–ஆம் ஆண்டில், ஆந்திரபிரதேசம், பீகார், மத்தியபிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் ராஜஸ்தான் ஆகிய ஐந்து மாநிலங்களின் ஊரக கூட்டுறவு மேம்பாட்டிற்காக 100 கோடி டாலர் கடன் வழங்க முடிவு செய்தது. இதில், 50 கோடி டாலரை ஏற்கனவே வழங்கியுள்ளது. மீதமுள்ள தொகையை அடுத்த ஓராண்டுக்குள் வழங்கும் என இவ்வங்கி தெரிவித்துள்ளது.